தமிழகத்தில் இருந்து மாநிலங்களவை தேர்தலில் போட்டியிடும்

திமுக, அதிமுக வேட்பாளர்கள் நாளை வேட்புமனு தாக்கல்

கமல்ஹாசனும் அன்றைய தினம் மனு தாக்கல் செய்வார்

சென்னை, ஜூன் 5: தமிழகத்தில் இருந்து மாநிலங்களவை தேர்தலில் போட்டியிடும் திமுக, அதிமுக வேட்பாளர்கள் 5 பேரும் 6ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்கின்றனர். இதேபோல திமுக கூட்டணியில் போட்டியிடும் கமல்ஹாசனும் அன்றைய தினம் வேட்புமனு தாக்கல் செய்கிறார்.

திமுக வேட்பாளர்கள் வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், கவிஞர் சல்மா மற்றும் கூட்டணி கட்சியை சேர்ந்த கமல்ஹாசன் ஆகிய 4 பேர் நேற்று காலை 11 மணிளவில் வேட்புனு தாக்கல் செய்வதாக நேற்று முன்தினம் தகவல் வெளியானது. ஆனால், தற்போது இந்த 4 பேரும் 6ம் தேதி (நாளை) வேட்புமனு தாக்கல் செய்வார்கள் என்று கூறப்படுகிறது. அன்றைய தினம் திமுக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளனர். முன்னதாக, நேற்று காலை சென்னை, ஆழ்வார்பேட்டையில் உள்ள திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்திற்கு அக்கட்சி எம்எல்ஏக்கள் வந்து, திமுக மற்றும் கூட்டணி சார்பில் மாநிலங்களவைக்கு போட்டியிடும் 4 வேட்பாளர்களை முன்மொழிவதாக கடிதம் வழங்கினார். ஒரு எம்பி வேட்பாளருக்கு 10 எம்எல்ஏக்கள் முன்மொழிய வேண்டும்.

இதேபோல, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நேற்று காலை சென்னை, ராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் அதிமுக தலைமை கழக நிர்வாகிகள், எம்எல்ஏக்கள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், அதிமுக சார்பில் போட்டியிடும் 2 வேட்பாளர்களை முன்மொழிவதாக எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அதிமுக எம்எல்ஏக்கள் கடிதம் வழங்கினர்.

இதையடுத்து அதிமுக மாநிலங்களவை எம்பி வேட்பாளர்கள் இன்பதுரை, தனபால் நாளை (6ம் தேதி) சென்னை, தலைமை செயலகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் வேட்புமனு தாக்கல் செய்கின்றனர். அப்போது அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் முன்னணி கட்சி தலைவர் பங்கேற்க திட்டமிட்டுள்ளனர்.

ஒரே நாளில் தமிழகத்தில் இருந்து போட்டியிடும் மாநிலங்களவை வேட்பாளர்கள் போட்டியிட மனு தாக்கல் செய்கின்றனர். அதேநேரத்தில் சுயேச்சை வேட்பாளர்களை எம்எல்ஏக்கள் முன்மொழியாததால் அவர்களது மனு தள்ளுபடி செய்யப்படும். அரசியல் கட்சிகளின் சார்பில் முன்மொழியப்படும் மனுக்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்கள் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வருகிற 12ம் தேதி மாலை வெளியாகும்.

ஸ்பெயின் மண்ணில் தமிழ்நாட்டின் அன்புமொழியை பேசிய

கனிமொழிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

▶ இந்தியா-பாகிஸ்தான் போர் குறித்து, இந்தியாவின் நிலைப்பாட்டை உலகிற்கு விளக்க ரஷ்யா, ஸ்லோவேனியா, லாட்பியா, கிரீஸ், ஸ்பெயின் நாடுகளுக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட ஒன்றிய அரசின் குழு தலைவர் கனிமொழி தாயகம் திரும்பினார். இதையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில் நேற்று சந்தித்து வாழ்த்து பெற்றார்.

சென்னை, ஜூன் 5: ஸ்பெயின் மண்ணில் தமிழ்நாட்டின் அன்புமொழியை பேசிய கனிமொழிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா நடத்திய 'ஆபரேஷன் சிந்தூர்' குறித்து உலக நாடுகளுக்கு விளக்கிட கனிமொழி உள்ளிட்ட எம்.பி.க்கள் குழு ரஷ்யா, ஸ்லோவேனியா, லாட்பியா, கிரீஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டனர். பயணத்தை முடித்துக் கொண்டு கனிமொழி உள்ளிட்ட எம்பிக்கள் இந்தியா திரும்பினர். இந்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சென்னையில் முகாம் அலுவலகத்தில் கனிமொழி எம்பி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவு:

ஸ்பெயின் மண்ணில், ''இந்தியாவின் தேசிய மொழி வேற்றுமையில் ஒற்றுமை" என உரக்கச்சொல்லி, மக்களின் உணர்வுகளை கைத்தட்டல்களாகவும் - உங்களால் அதிகம் பகிரப்படும் காணொளியாகவும் மாற்றிய தங்கை கனிமொழியை வாழ்த்தினேன். இந்திய நாட்டுக்கான குரலாகத் தமிழ்நாட்டின் அன்புமொழியை - ஒற்றுமைமொழியை பேசிய தங்கை கனிமொழியை கண்டு பெருமை கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மக்கள்தொகை கணக்கெடுப்பை தள்ளிப்போட்டு

நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தை குறைப்பதா?

முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி

சென்னை, ஜூன் 5: நியாயமான தொகுதி மறுவரையறை எனும் கோரிக்கையில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு நிற்கிறோம். ஒன்றிய அரசு எங்களுக்குத் தெளிவான விளக்கத்தை அளித்தாக வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தொகுதி மறுவரையறை குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ்தள பதிவு:

2026ம் ஆண்டுக்குப் பிறகு நடத்தும் முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத் தொடர்ந்து, தொகுதி மறுவரையறை செய்ய வேண்டும் என அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. மக்கள்தொகைக் கணக்கெடுப்பை 2027ம் ஆண்டுக்குத் தள்ளிப்போட்டு, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் சதித்திட்டத்தை பாஜ வெளிப்படையாக அறிவித்துள்ளது.

தொகுதி மறுவரையறை ஆபத்து குறித்து முன்பே நான் எச்சரித்திருந்தேன். அது இப்போது நிரூபணமாகிவிட்டது. பாஜவுடன் கூட்டு சேர்ந்துள்ளதன் மூலம், பழனிசாமி இந்தச் சதித் திட்டம் பற்றிப் பேசாமல் அமைதி காப்பதோடு, இந்தத் துரோகத்துக்குத் துணைபோகிறவராகவும் இருக்கிறார்.

டெல்லி ஆதிக்கத்தின் முன் அவர் அடிபணிந்து விட்டது இப்போது தெள்ளத் தெளிவாகியுள்ளது. நியாயமான தொகுதி மறுவரையறை எனும் கோரிக்கையில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்று பட்டு நிற்கிறோம். ஒன்றிய அரசு எங்களுக்குத் தெளிவான விளக்கத்தை அளித்தாக வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இலவச முழு உடற்பரிசோதனை செய்ய

'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம் விரைவில் தொடக்கம்

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை, ஜூன் 5: சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள டிஎம்எஸ் வளாகத்தில் நீடித்த நுரையீரல் அடைப்பு நோய் மற்றும் கொழுப்பு மிகு கல்லீரல் நோய் விழிப்புணர்வு பயிற்சி முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். தொடர்ந்து, அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

இந்தியாவில் 3வது பொதுவான இறப்பிற்கு காரணமாக விளங்குகின்ற ஒரு பெரிய நோய், நீடித்த நுரையீரல் அடைப்பு நோய். கொழுப்பு மிகு கல்லீரல் நோய் குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி, ஆரம்ப நிலை பரிசோதனைகளை மேற்கொள்வது போன்ற பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு முதல்வர் மனதிற்கு மிகவும் நெருக்கமான ஒரு சிறப்பான திட்டம் ஒன்று மிக விரைவில் சென்னையில் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது. இந்த திட்டத்தின் பெயர் 'நலம் காக்கும் ஸ்டாலின்'. பொருட்செலவு இல்லாமல் முழு உடற்பரிசோதனைகள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளின் சிறப்பு மருத்துவர்கள் சிறப்பு மருத்துவ வசதிகளோடு பெரிய அரங்குகள் அமைக்கப்பட இருக்கிறது. முழு உடற்பரிசோதனை மக்களைத் தேடி, மக்கள் இருக்கும் இடங்களுக்கே சென்று பரிசோதனைகள் செய்யும் திட்டம் மிக விரைவில் தொடங்கப்பட உள்ளது.

கொரோனா பாதிப்புகள் என்பது பெரிய அளவில் பயப்பட வேண்டியதில்லை. தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக கண்காணிப்பில் உள்ளவர்கள் எண்ணிக்கை 216. இவர்களுக்கு 3 நாள் சளி, இருமல், தொண்டை வலி, காய்ச்சல் போன்ற பாதிப்புகளோடு குணமடைந்து விடுகிறார்கள். தொடர்ந்து இந்த பாதிப்புகளுக்கு உள்ளானவர்களை அந்தந்த மாவட்ட சுகாதார அலுவலர்கள் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே பெரிய அளவில் பதற்றப்பட தேவையில்லை. பொது இடங்களுக்கு செல்லும் கர்ப்பிணி தாய்மார்கள், வயது மூத்தவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்கள் போன்றவர்கள் முகக் கவசம் அணிந்து செல்ல அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் செந்தில்குமார், தேசிய நல வாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் செல்வவிநாயகம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மரக்காணம் கலவரத்தால் ஏற்பட்ட இழப்பை

பாமகவிடம் வசூலிக்கும் விசாரணையை 8 வாரங்களில் முடிக்க வேண்டும்

தமிழக அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூன் 5: மாமல்லபுரத்தில் கடந்த 2013ல் வன்னியர் சங்கத்தினர் நடத்திய சித்திரை திருவிழாவின்போது, மரக்காணத்தில் ஏற்பட்ட கலவரத்தில் பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டன. பல்வேறு மாவட்டங்களில் டாஸ்மாக் கடைகள் தீவைக்கப்பட்டன.

பா.ம.க.வினர் போராட்டம் காரணமாக 2013 ஏப்ரல் 25ம் தேதி முதல் மே 19ம் தேதி வரை சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் பொது போக்குவரத்து பாதிக்கப்பட்டது. 12 மாவட்டங்களில் டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டன. இதனால் ஏற்பட்ட வருவாய் இழப்பை பா.ம.க.விடம் வசூலிப்பது தொடர்பாக தமிழக வருவாய் நிர்வாக ஆணையர் விசாரணை நடத்தி வருகிறார்.

இந்நிலையில், இந்த விசாரணை தமிழ்நாடு பொது சொத்து சேதம் தடுப்பு சட்டத்தை பின்பற்றி நடத்தப்படவில்லை எனக் கூறி, இது சம்பந்தமாக இறுதி உத்தரவு பிறப்பிக்க தடை கோரி பா.ம.க. கவுரவ தலைவர் ஜி.கே.மணி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

அதில், இழப்பீட்டை தீர்மானிக்கும் முன்பு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதா என்று ஆரம்பகட்ட விசாரணை நடத்த உயர் நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டுள்ளது. அதை பின்பற்றாமல் இழப்பீடு குறித்து முடிவு செய்யும் விசாரணையை நடத்த கூடாது. இழப்பீடு கோரி டாஸ்மாக் நிர்வாகம், போக்குவரத்து கழகங்கள் அளித்த விண்ணப்பங்களை நிராகரிக்க வேண்டும். சட்ட விதிகளை பின்பற்றி விசாரணை நடத்தாமல் இழப்பீடு குறித்து இறுதி உத்தரவு பிறப்பிக்க தடை விதிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

இந்த மனு, நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, வெறும் அச்சத்தின் அடிப்படையில், வருவாய் நிர்வாக ஆணையரின் விசாரணையை தடுக்கும் நோக்கில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலும், சட்ட விதிகளின்படியும் விசாரணை நடத்தப்படும் என்று அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் அட்வகேட் ஜெனரல் ஜெ.ரவீந்திரன் உறுதியளித்தார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, உயர் நீதிமன்ற உத்தரவின்படி விசாரணையை நடத்தி 8 வாரங்களில் இறுதி உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.

வடகிழக்கு இரயில்வே

மின்-ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு:

இந்தியக் குடியரசுத் தலைவர் சார்பில், துணை முதன்மை மின் பொறியாளர்/குடியிருப்பு, வடகிழக்கு இரயில்வே, கோரக்பூர் அவர்கள் பின்வரும் பணிக்கான இணையவழி (மின்–ஒப்பந்தபுள்ளி) மூலம் "திறந்த" மின்–ஒப்பந்தபுள்ளியை வரவேற்கிறார்:

வ.எண் 1, டெண்டர் அறிவிப்பு எண் மற்றும் பணியின் விவரம்: 08–2025–குடியிருப்பு, பணியின் பெயர்: தலைமையகத்தில் உள்ள பல்வேறு அரங்குகள் மற்றும் அலுவலகங்களில் குளிரூட்டும் வசதியை வழங்குவதற்காக மின்சார விநியோகத்தை மேம்படுத்துவது தொடர்பான மின் பணிகள். தோராயமான மதிப்பு: ₹3,84,91,888/– முன்வைப்புத் தொகை (E.M.D): ₹ 3,42,500/, டெண்டர் படிவத்தின் கட்டணம் – பூஜ்யம், ஏற்புக் கடிதம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து முடிக்கப்பட வேண்டிய காலம்/அவகாசம்: 06 மாதங்கள்.

●மின்–டெண்டரை இணைய வழியில் 24.06.2025 அன்று 15:00 மணி வரை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

●இந்த டெண்டர்களுக்கு கைமுறையிலான விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது, இவ்வாறு பெறப்படும் எந்தவொரு கைமுறையிலான விண்ணப்பம் நிராகரிக்கப்படும். முழு விவரங்கள் மற்றும் ஏலப்புள்ளியை சமர்ப்பிக்க இந்திய ரயில்வே IREPS அதிகாரப்பூர்வ www.ireps.gov.in இணையதளத்தைப் பார்வையிடவும்.

துணை முதன்மை மின் பொறியாளர்/குடியிருப்பு கோரக்பூர்

CPRO/Vidyut–54

கூரையிலோ படிக்கட்டிலோ பயணம் செய்யாதீர்

JM FINANCIAL

JM ஃபைனான்சியல் அசெட் ரீகன்ஸ்டிரக்சன் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அடையாள எண் (CIN): U67190MH2007PLC74287

பதிவு அலுவலகம்: 7ஆவது தளம், சினெர்ஜி, அப்பாசாஹெப் மராத்தே மார்க், பிரபாதேவி, மும்பை 400025. | இணையதளம்: www.jmfinancialarc.com

தொடர்பு நபர்: 1. விஜய் தேவ்ராஜ் – 9843833009, 2. ரோஹன் சவந்த் 9833143013 3. சிந்துஜா பிள்ளை 022 6224 1676

மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு - புதிய விற்பனை

நிறுவனமானது கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") பிரிவு 5 (1) (b)–இன் கீழும் மார்ச் 29, 2023 தேதியிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படியும் ("ஒப்படைப்பு ஒப்பந்தம்") கடன் தொகுப்பு ஒன்றினை (கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் உட்பட) அதன் பேரிலான கடனீட்டுச் சொத்துடனும் அதன் அனைத்து உரிமைகள், உடைமைகள், பாத்தியதைகள் ஆகியவற்றுடனும் சேர்த்து JMFARC–ஆரண்யா–டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகச் செயல்படும் JMFARC (JM) (இனி ஒப்படைப்புதார நிறுவனம் எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்திடம் ஒப்படைத்து விட்டது. PCHFL நிறுவனமானது சேவை வழங்குநர் / வசூல் முகவர் எனும் முறையில் அனைத்துச் செயல்பாடுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஒப்படைப்பின்படி / சேவை ஒப்பந்தத்தின்படி அதிகாரம் அளித்து அமர்த்தியுள்ளது என்பதை இதன் மூலம் அறிய வேண்டுகிறோம். ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரானவர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்தினை சர்ஃபாசி சட்டம் 2002–இன் கீழ் சுவாதீனம் செய்துள்ளதை அடுத்துக் கடன்தாரர்/களிடமிருந்து நிலுவைத் தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு சுவாதீனத்தில் இருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை 'உள்ளது உள்ள இடத்தில்', 'உள்ளது உள்ளபடி', 'உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்' எனும் முறையில் வாங்கிக் கொள்ளக் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் விலைகோரல்கள் வரவேற்கப்படுகின்றன. இதன் விவரங்கள் பின்வருமாறு:

கடன் குறியீடு/ கிளை/ கடன்தாரர்(கள்)/ உப-கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	சொத்து முகவரி_இறுதியானது	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை (EMD) (நிர்ணய விலையின் 10%)	நிலுவைத் தொகை (30.05.2025)
கடன் குறியீடு எண் : 01000005720, சென்னை – கீழ்ப்பாக்கம் (கிளை), பிரியங்கா R (கடன்தாரர்), ராஜன் S (உப கடன்தாரர் 1)	தேதி : 20.02.2020 – ரூ.1545839/– (ரூபாய் பதினைந்து லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்பது மட்டும்)	அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட சொத்து. பரப்பளவு: பிளாட் எண் F–1, முதல்தளம், நாவ்கணேஷ் எலிகன்ஸ், மனை எண் H, H – பிளாக், ஜாஸ்மின் நகர் விரிவு, சூரப்பட்டு, சென்னை–600066. எல்லைகள்: வடக்கு: சர்வே எண் 197/2A1G, 2A1H, 2A11 ஆகியவற்றில் உள்ள நிலம், தெற்கு: 20 அடிச் சாலை, கிழக்கு: சர்வே எண் 197/2A1K–இல் உள்ள நிலம், மேற்கு: மனை எண் G.	ரூ.1193580/– (ரூபாய் பதினொரு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து ஐந்நூற்று எண்பது மட்டும்)	ரூ.119358/– (ரூபாய் ஒரு லட்சத்து பத்தொன்பதாயிரத்து முந்நூற்று ஐம்பத்தெட்டு மட்டும்)	ரூ.3353760/– (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து எழுநூற்று அறுபது மட்டும்)

மின்-ஏல தேதி: 15.07.2025, முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை (எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடங்கள் காலநீட்டிப்புடன்), ஏலப்புள்ளி தாக்கல் செய்யக் கடைசி தேதி: 14.07.2025, மாலை 4:00 மணிக்குள்.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறியப் பார்க்க வேண்டிய இணையத்தளம்: https://www.jmfinancialarc.com/Home/Assetsforsale அல்லது https://www.bankauctions.in.

சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடன்தாரருக்கான / ஜாமீன்தாரருக்கான / அடமானதாரருக்கான சட்டப்படியான 30 நாள் விற்பனை அறிவிப்பு

மேற்கூறிய கடன்தாரருக்கு / ஜாமீன்தாரருக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், 13(2)–இன் கீழான அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையை தேதிவரையில் சேர்ந்துள்ள வட்டியுடன் ஏல தேதிக்குள் முழுமையாகச் செலுத்த வேண்டும். தவறினால் சொத்தானது ஏலமிடப்படுவதோடு / விற்கப்படுவதோடு அல்லாமல் நிலுவைத் தொகைகள் எஞ்சியிருப்பின் அவையும் கடன்தாரரிடமிருந்து / ஜாமீன்தாரரிடமிருந்து வட்டி மற்றும் செலவினத்துடன் திரும்பப் பெறப்படும்.

ஒம்/– (அதிகாரப்பூர்வ அலுவலர்)
(ஆரண்யா – டிரஸ்ட்)

தேதி: 05.06.2025, இடம்: சென்னை RPU

வடகிழக்கு இரயில்வே டெண்டர் அறிவிப்பு எண்: 30, தேதி: 03.06.2025

இணையதளம்: www.ner.indianrailways.gov.in மின்னஞ்சல்: cos@ner.railnet.gov.in

மின் கொள்முதல் முறையின் மூலம் டெண்டர்களுக்கு அழைப்பு

இந்தியக் குடியரசுத் தலைவர் சார்பில் பொருட்களுக்கான உயர் முதன்மை மேலாளர், வடகிழக்கு இரயில்வே, கோரக்பூர் – 273012 அவர்கள் கீழ்க்காணும் பொருட்கள் வழங்கலுக்கான டெண்டர்களை மின்–கொள்முதல் முறைப்படி வரவேற்கிறார். பொருட்களின் முழுமையான விவரம் மற்றும் இதர விதிமுறைகளும் www.ireps.gov.in இணையதளத்தில் காணலாம்.

இனம் எண்	டெண்டர் எண்	கடைசி தேதி	பொருட்களின் சுருக்க விவரம்	கொள்முதலுக்கான அங்கீகார வழங்குநர்
1	26250495	28/08/25	ஆல்டர்னேட்டர்களை இயக்க முடிவற்ற V-பெல்ட் முதலானவை	---------
2	29251024	04/08/25	IRS EPM-143 மிமீ IR-க்கான அடிப்படை அசெம்பிளி செட் முதலானவை	---------
3	29251067	28/07/25	EPM-220 மிமீ ஸ்ட்ரோக்கிற்கான அடிப்படை அசெம்பிளி செட் முதலானவை	---------
4	29251065	21/07/25	EPM-220 மிமீ-க்கான பிரதான கியர் அசெம்பிளி செட் முதலானவை	---------
5	29251021	14/07/25	IRS EPM 143-க்கான கான்டாக்டர் யூனிட் அசெம்பிளி முதலானவை	---------
6	22252183	14/07/25	கழிவுத்தொட்டி அமைப்பு மற்றும் பொருத்துதல் முதலானவை	---------
7	30241105	08/07/25	60 KVA மின்மாற்றிக்கான கான்டாக்டர் முதலானவை	---------
8	22251858	07/07/25	லூவர் அமைப்புடன் கூடிய கழிப்பறை ஜன்னல் முதலானவை	---------
9	29251025	01/07/25	IRS க்கான பிரதான கியர் அசெம்பிளி செட் முதலானவை	---------
10	26255037	30/06/25	அதிக திண்மமுடைய N உற்பத்தி மற்றும் விநியோகம் முதலானவை	RDSO
11	22251914	30/06/25	சக்கரத் தொகுதிக்கான தரப்படுத்தப்பட்ட பிரேக் டிஸ்க் முதலானவை	RDSO
12	29251064A	30/06/25	60 கி.கி TWS கிளாம்ப் அசெம்பிளி பாகங்கள் செட் முதலானவை	---------
13	28250932	30/06/25	ஃப்ளக்ஸ் கோர்டு MIG/MAG வெல்டிங் ஃபில்லர் வயர் முதலானவை	ICF
14	26255050	30/06/25	மெட்டல் லைனர் 60 உற்பத்தி மற்றும் விநியோகம் முதலானவை	---------
15	26255071	30/06/25	6.2 மிமீ தடிமன் கொண்ட C உற்பத்தி மற்றும் விநியோகம் முதலானவை	RDSO
16	22252108	26/06/25	RCF வரைபட எண் LW-க்கு ஆன்டி ரோல் பார் பிராக்கெட் முதலானவை	RCF
17	22251160	26/06/25	FIAT போகிகளுக்கான ஆக்ஸில் பாக்ஸ் பிவோட் புஷ் முதலானவை	RDSO
18	26245062E	26/06/25	முன்-அழுத்தம் கொண்ட M உற்பத்தி மற்றும் விநியோகம் முதலானவை	RDSO
19	26255029	25/06/25	10125 மிமீ 1 இன் 1 உற்பத்தி மற்றும் விநியோகம் முதலானவை	RDSO
20	22241156A	25/06/25	டிராஃப்ட் யோக் முதலானவை	ICF
21	26255026	25/06/25	1 இன் 12 BG 60 கிகி உற்பத்தி மற்றும் விநியோகம் முதலானவை	RDSO
22	22252378A	25/06/25	டிஸ்க் பிரேக்கிற்கான சின்டர்டு பிரேக் பேட் செட் முதலானவை	---------
23	22241333B	24/06/25	ரப்பர் ஸ்பிரிங் முதலானவை	ICF
24	22252043	23/06/25	சரக்குக்கான 7/8" விட்டம் கொண்ட லாக் போல்ட் & காலர் முதலானவை	RDSO
25	26250673	23/06/25	ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஸ்ட்ரெயிட் ஏர் பிரேக் பைப் முதலானவை	---------
26	22251491A	23/06/25	ஃபிளெக்ஸ் பால் கேபிள் நீளம் (L)-2333 மிமீ முதலானவை	RDSO
27	22252056	23/06/25	ஃபியட் போகிக்கான ஆன்டி ரோல் பார் அசெம்பிளி முதலானவை	RCF
28	22252190	21/06/25	இன்டர்கார் கேங்வே பொருத்துதல். RCF's வரைபடம் முதலானவை	RCF
29	22241511C	20/06/25	ICF வரைபடத்தின்படி குப்பைத்தொட்டி அசெம்பிளி (முழுமையானது) முதலானவை	---------
30	22251483	19/06/25	பகுதி எண் 1/604545 -இன்படி போனிக் வீல் முதலானவை	RDSO
31	28251043	18/06/25	உயர் செயல்திறன் கொண்ட துரு எதிர்ப்பு எபோக்சி முதலானவை	---------
32	22251205	18/06/25	வலது பக்கத்திற்கான கண்ட்ரோல் ஆர்ம் அசெம்பிளி முதலானவை	RDSO
33	22250738	18/06/25	மேம்படுத்தப்பட்ட திறன் கொண்ட பக்க பஃபர் பிளஞ்சர் முதலானவை	ICF
34	22251810	18/06/25	எர்திங் உபகரணத்திற்கான பராமரிப்பு கிட் 02 முதலானவை	RCF
35	22241457C	18/06/25	1225 KgM -க்கான ரப்பர் பஃபர் ஸ்பிரிங் முதலானவை	ICF

CPRO/S-15 பொருட்களுக்கான உயர் முதன்மை மேலாளர், கோரக்பூர்

"இரயிலில் எரியக்கூடிய பொருட்களுடன் பயணம் செய்யாதீர்!"

அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கை

பொது பிரிவினருக்கான கலந்தாய்வு தொடங்கியது

முதல் நாளிலேயே வணிகவியல், கணித அறிவியல் பாடங்கள் நிரம்பின

▶ சென்னை மாநில கல்லூரியில் நேற்று நடந்த மாணவர் சேர்க்கை கலந்தாய்வில் கலந்துகொண்ட மாணவ, மாணவிகள்.

சென்னை, ஜூன் 5: அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை படிப்புகளில் சேருவதற்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு நேற்று தொடங்கியது. வழக்கம்போல வணிகவியல், கணித அறிவியல் பாடங்களையே மாணவ, மாணவிகள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் சேருவதற்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவு மே 7 முதல் 27ம் தேதி வரை நடந்தது. 2 லட்சத்திற்கும் அதிகமான மாணவ-மாணவிகள் விண்ணப்பித்திருந்தனர். இதை தொடர்ந்து, தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டு முதல்கட்டமாக சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு ஜூன் 2 மற்றும் 3ம் தேதி நடந்தது. மொத்த இடங்களில் 5 சதவிகிதம் சிறப்பு பிரிவினருக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, 6 ஆயிரத்து 200 சிறப்பு இடங்களில் 2 ஆயிரத்து 300 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை தொடர்ந்து, பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வு ஜூன் 4ம் தேதி (நேற்று) தொடங்கி 14ம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு நேற்று தொடங்கியது.

சென்னையில் மாநில கல்லூரி, ராணிமேரி மகளிர் கல்லூரி, அண்ணா சாலை காயிதே மில்லத் மகளிர் கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகளில் கூட்டம் அலைமோதியது. மாநில கல்லூரியில் நடந்த கலந்தாய்வு குறித்து அக்கல்லூரியின் முதல்வர் ராமன் கூறுகையில், "முதல் நாளில் வணிகவியல், கார்ப்பரேட் செக்ரட்டிரிஷிப், பொருளாதாரம், கணிதம், புள்ளியியல், உளவியல் ஆகிய படிப்புகளுக்கான கலந்தாய்வு நடத்தப்பட்டு 600க்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் சேர்ந்துள்ளனர். மாணவர்களின் எண்ணிக்கையை விட மாணவிகளின் எண்ணிக்கைதான் அதிகமாக இருந்தது. வியாழக்கிழமை (இன்று) பிஎஸ்சி பட்டப்படிப்புகளுக்கு கலந்தாய்வு நடத்தப்படும். எங்கள் கல்லூரியில் சேர தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில் இருந்து மட்டுமின்றி 133 நாடுகளில் இருந்தும் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்" என்றார்.

தமிழ்நாடு அரசு

தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை-600 025

மற்றும்

கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை-600 015

எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. முதுநிலை பட்டப்படிப்பு சேர்க்கை 2025–2026

விளம்பர அறிக்கை எண்.766/J1/2025

2025–26ஆம் கல்வியாண்டிற்கு இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற தகுதி வாய்ந்த மாணாக்கர்கள் அரசு/அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் கலைக் கல்லூரிகள் / அண்ணா பல்கலைக் கழக துறைகள் (University Departments) / வட்டார மையங்கள் (Regional Centers) / அண்ணாமலை பல்கலைக்கழகம் / சென்னை பல்கலைக் கழகம் / இதர பல்கலைக் கழகங்கள் / சுயநிதி பொறியியற் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – 600 025 மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை – 600 015 கட்டுப்பாட்டில் இயங்கும் எம்.பி.ஏ./எம்.சி.ஏ. (MBA/MCA) முதுநிலை பட்டப்படிப்பு சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

- விண்ணப்பிக்கும் முறை: www.tn-mbamca.com என்ற இணையதளம் வாயிலாக தேவையான சான்றுகளுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.
- பதிவுக் கட்டணம்: பதிவுக் கட்டணத்தை விண்ணப்பதாரர் Debit Card/ Credit Card/ Net Banking இணையதளம் வாயிலாக மட்டுமே செலுத்தலாம்.
- விண்ணப்பதாரர்கள் எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. முதுநிலை பட்டப்படிப்புகளுக்கு தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

இணையதளம் வாயிலாக விண்ணப்பம் பதிவு மற்றும் சான்றிதழ் பதிவேற்றம் செய்ய:

எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. (MBA / MCA)	தொடங்கும் நாள்	05.06.2025
	முடியும் நாள்	30.06.2025

எம்.பி.ஏ/எம்.சி.ஏ. முதுநிலை பட்டப்படிப்பு கலந்தாய்வு நடைமுறைகளான விண்ணப்பப் பதிவு, சான்றிதழ் பதிவேற்றம், சான்றிதழ் சரிபார்ப்பு, கல்லூரி தேர்ந்தெடுத்தல், தற்காலிக மற்றும் இடைக்கால ஒதுக்கீட்டு ஆணை ஆகியவை அனைத்தும் இணையதளம் வாயிலாக மட்டுமே நடைபெறும்.

மேலும் விவரங்கள் அறிய www.tn-mbamca.com என்ற இணையதள முகவரியில் "INFORMATION AND INSTRUCTIONS TO CANDIDATES" பக்கத்தில் பார்க்கவும்.

தொடர்பு எண். 0422–2451100

தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–600 025

செ.ம.தொ.இ./569/வரைகலை/2025